New
Science Academy
In Front of B. M. C.
JAFFNA.

★ PHYSICS ★
By
சோதிலிங்கம்
திங், வெள்ளி - 4.00 p.m.
சடப்பொருளியல்
செவ், வியாழன் - 4.00p.m.
ஒட்டமின்னியல்
புதன் - 4.00 - 6.00 p.m.
சடப்பொருளியல்
புதன் - 6.30 - 8.00 a. m.
வெப்பவியல்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
In Front of B. M. C.
JAFFNA.

★ CHEMISTRY ★
By
செல்வரஞ்சன்
திங்கள், வெள்ளி - 6.30a.m
தாக்கவியக்கவியல்
செவ், வியா - 6.30 a.m
அற்கீன்
செவ், வியா - 5 00 p.m
அவத்தை சம நிலை

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ 01 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 19 (15-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 86

## கடல் கடந்த நாட்டில் தமிழர் எழுச்சி




விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரான்சின் பலம் மிக்க தொழிலாளர் அமைப்பான சி. ஜி. டி. யுடன் இணைந்து நடத்திய மே தினப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படம். (இ)

# பாரிஸில் விடுதலைப் புலிகள் பேரணி

பாரிஸ், மே 15

பிரான்சின் தலைநகரான பாரிஸில் இடம்பெற்ற மேதின அணிவகுப்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியும் கலந்துகொண்டது.

பிரான்சின் பலம் மிக்க தொழிலாளர் அமைப்பான சி. ஜி. டி.யுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மேதினக் கொண்டாட்டங்களை நடத்தியது.

இந்த மேதினப் பேரணியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பதாகைகளைத் தாங்கிச் சென்ற காட்சி எழுச்சி மிக்க ஒன்றாக இருந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புரட்சிகர கோஷங்களை எழுப்பி புலிச்சின்னம் பொறித்த செங்கொடிகளுடன் அவர்கள் சக பிரெஞ்சுத் தொழிலாளர்களுடன் இணைந்து அணிவகுத்துச் சென்றனர்.

இந்த அணிவகுப்பில் தமிழர் பண்பாட்டுத் துறைக் கலைகளுள் ஒன்றான கோலாட்டம், நாதசுர மேள வாத்தியங்களுடன் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஐரோப்பாவில் நடத்திய மேதின ஊர்வலங்கள் சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகளிலும் இடம்பெற்றன.

''தமிழீழ தாயகமே எங்கள் தாகம்'' ''எமக்கு வேண்டும் சுதந்திரம்'' ''எமது தலைவர் பிரபாகரன்'' ''உலகத் தொழிலாளர்களே சரம் கொடுங்கள்'' ''தொழிலாளர் நாம் ஒன்றுபடுவோம்'' என்பன விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய பேரணிகளில் இடம்பெற்ற முக்கிய கோஷங்களாக ஒலித்தன. (இ-ப)

## சுபநேரம்

15-05-1990

செவ்வாய்க்கிழமைவைகாசி01

சுபநேரம்:

10-23 முதல் 11-53 வரை

இராகுகாலம்

02-53 முதல் 04-23 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## அமைச்சர் ஹமீத் நேற்று கொழும்பு திரும்பினார்

கொழும்பு, மே 15

லண்டன் சென்றிருந்த நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் எதிர் பார்க்கப்பட்டபடி நேற்று நண்பகல் கொழும்பு திரும்பினார்.

கொழும்பில் சர்வகட்சி மாநாட்டு அலுவலகத்திற்கு நேற்று மாலை அவர் சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

இன்று நடைபெறும் அரசாங்கம் - ஈ. பி. ஆர். எல். எவ் பேச்சுகளின் போது அரச தரப்பு பிரதிநிதியாக ஜனாப் ஹமீத் பங்குபற்றுவாரா என்பதை நேற்றிரவு வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ)

## டியூட்டரிகளை பதிவு செய்ய புலிகள் கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது நிறுவனத்தை பதிவு செய்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிவேண்டுகோள்விடுத்துள்ளது.

கோண்டவில் மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கல்விப் பகுதியிலேயே பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்—

காலை 9 மணி முதல் 12 மணி வரையும், பி. ப. 2.30 முதல் 5 மணி வரையும் பதிவு செய்யலாம் என்றும் முன்னணி அறிவித்துள்ளது. (உ-3)

## வவுனியா தமிழ் வித்தியாலயம்: நிரந்தர அதிபர் நியமனம்

### மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

வவுனியா, மே 15

வவுனியா, தமிழ் மகா வித்தியாலயத்தில் நிரந்தர அதிபர் இல்லாதகுறை சனியன்று தீர்த்துவைக்கப்பட்டது.

புதிய அதிபராக திரு. கே. சீனிவாசகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்கக் கோரி மேற்படி மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று திங்களன்று கல்விப் பணிமனையின் முன்னால் மறியல் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் வவுனியாப் பொறுப்பாளர் ராம் பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று மாணவர்களுக்கு எடுத்துக் கூறி இருந்தார்.

இதனை அடுத்து கல்விப் பகுதியினரால் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டு குறைபாடு தீர்க்கப்பட்டது.

## வவுனியாவில் ராணுவ வீரர் கைது

வவுனியா மே 15

விடுமுறையில் வீடு சென்று திரும்பிய இராணுவ வீரர் ஒருவர் சந்தேகததில் புலிகளினால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

வவுனியாயாழ்.வீதியில்உள்ள அரசினர் பண்ணைக்கருகில் சனிஇரவு இச்சம்பவம் இடம் பெற்றது. [இ164]

## கிணற்றில் விழுந்த யானை

வவுனியா மே 15

செட்டிகுளம் பகுதியில் கல்லாறு என்னுமிடத்தில் பாழடைந்த கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்த யானை ஒன்றை கிராமவாசிகள் மீட்டனர். [இ-164]

## காஷ்மீர் செல்ல அனுமதி மறுப்பு

புதுடில்லி, மே 14

பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களுக்கு விஜயம் செய்ய சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

இப்படி வி. பி. சிங் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



எங்கடை தமிழ்ப் பெடியளுக்கு மாறி மாறி ஒரே சோதனையாய்த் தான் இருக்கு எண்டு சொல்லுங்கோ......!

### மகாயான பிக்குவாக மாறிய

## பெல்பொல விபாசி தேரருக்கு அரசாங்க வரவேற்பு இல்லை

கொழும்பு மே 15

ஜப்பானில் மகாயான புத்த பிக்குவாக மாறிய பின்னர் இம் மாதம் 27ஆம் திகதி நாடு திரும்பும் பெல்பொல விபாசி தேரரை வரவேற்கச் செய்யப்படும் எந்த ஒழுங்குகளுக்கும் அரச ஆதரவு வழங்கப்படக் கூடாது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாச பணித்துள்ளார்.

இலங்கையில் உள்ள மூன்று பௌத்த 'நிகாயக்' களினதும் சங்கைக்குரிய மகா நாயகர்கள் தெரிவித்த ஆலோசனைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கோட்டைப் பிரிவைச் சேர்ந்த புத்த சங்க சபையில் அங்கம் வகித்தவரான பெல்பொல விபாசி தேரர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நிரந்தர நியமனம் வழங்க

## வசதிக்கட்டண ஆசிரியருக்கு ஜூலையில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 15

வசதிக் கட்டண ஆசிரியர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு அரசாங்க நியமனம் வழங்க ஏதுவாக எதிர்வரும் ஜூலை யாத நடுப்பகுதியில் நேர்முகப் பரீட்சைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நேர்முகப் பரீட்சைகளை மாவட்ட ரீதியாக நடத்த கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் தெரிவான பயிலுநர் ஆசிரியர்களுக்கு 3 வருட சேவைக்காலப் பயிற்சி வழங்கப்பட்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் தரத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளனர். அதற்கான பயிற்சி எதிர்வரும் செப்டம்பரில் ஆரம்பமாக உள்ளது.

அந்தப் பயிற்சி நெறியில் வசதிக்கட்டண ஆசிரியர்களை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வீரசிங்கம் மண்டபம் திருத்த வேலை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மே 15

வீரசிங்கம் மண்டப புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் 107 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் புனரமைக்கப்பட இருக்கிறது

கட்டடம் முற்றாக இடிக்கப்படாமல் சேதமடைந்த பகுதிகளைத்திருத்தி நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட இருக்கின்றது.

கடந்த வாரம் மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு கே வேலாயுதபிள்ளை, யாழ் கூட்டுறவுஉதவிஆணையாளர் திரு. எஸ. ஐ. நித்தியரஜ் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.சி.சிவமகாராசா

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ★ யாழ்ப்பாணத்துக்குப் புதிதாக

# ரூ.300கோடி செலவில் போதனா ஆஸ்பத்திரி

## பல்கலைக்கழகம், யாழ். வைத்தியசாலை கூட்டாகக் கோரிக்கை விடுத்தால் கிடைக்கும்

### நேற்றைய கொழும்பு மாநாட்டில் முடிவு

கொழும்பு, மே 15

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் கூட்டாக கோரிக்கை Joint Proposal ஒன்றை முன்வைத்தால் யாழ்ப்பாணத்திற்கு என புதிய போதனா ஆஸ்பத்திரி அமைக்க வாய்ப்பு ஏற்படும்.

கூட்டுக்கோரிக்கை முன்வைக்கப்பட்டால் யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு அருகில் உள்ள ஏழரை ஏக்கர் காணியில் ஆயிரத்து 500 படுக்கைகளைக் கொண்ட போதனா வைத்தியசாலை ஒன்று சுமார் 300 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றைய மாநாட்டில் சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. ஜோ. பெர்னாண்டோ, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகார, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா, மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம், பேராசிரியர்கள் கருணானந்தன், எஸ். இராமதாஸ், எஸ். சரவணபவானந்தன், விரிவுரையாளர்கள் நாகேஸ்வரன், சிவராஜா ஆகியோரும் மற்றும் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இந்த மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட

(5 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைவர்களுடன் பேச ஒஸி விரைவில் யாழ். வருவார்

## கொழும்பில் நேற்று அவரே உதயனுக்குத் தகவல்

கொழும்பு. மே 15

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் [ஒஸி பிரிவு] தலைவர் திரு. ஒஸி அபேகுணசேகரா விரைவில் யாழ்ப்பாணம் வருவார்.

அவரே நேற்று இத்தகவலை கொழும்பில் உதயன் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய தமிழ்க்குழுக்களுடனும் தமதுகட்சி பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் அவர் சொன்னார்.

1986ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளைச் சந்திக்க தாம் விஜேகுமாரணதுங்காவுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்றதை அவர் நேற்று நினைவு கூர்ந்தார்.

''அப்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நேரடியாக சந்தித்து, கலந்து பேசி, அறிந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் சென்றோம். இப்போது வடக்கு, கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து பேசுவதற்காக அங்கு செல்லவிருக்கிறோம்.

வடக்கு, கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை இலங்கை அரசு உறுதிசெய்ய முடியாத நிலையில் உள்ளது. அங்குள்ள தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளுமே அவர்களைப் பாது

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சுமார் 400 தமிழ் இளைஞர் தொடர்ந்து காவலில்!

கொழும்பு, மே. 15

கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் கடந்த சில தினங்களில் கைதான சுமார் நாநூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸாரின் விசாரணைகளின்போது தாம் கொழும்பில் தங்கி இருப்பதற்கான திருப்தியான காரணத்தை தெரிவிக்காதவர்களே இவ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரில் தமிழ் இளைஞரின் அவலம்

கொழும்பு, மே 15

கொழும்பில் உள்ள தமிழ் இளைஞர்கள் நடு வீதியில் நிற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஹோட்டல்கள், விடுதிகள் மற்றும் வீடுகளில் தங்கி இருந்த தமிழ் இளைஞர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### வீரநகர்ப் பகுதி அசம்பாவிதம்:

## சப் இன்ஸ்பெக்டரும் 5 பொலீஸாரும் வேலை நீக்கம்

கொழும்பு மே 15

கடந்த மாதம் 10 ஆம் திகதி திருகோணமலை வீரநகர்ப் பகுதியில் பதற்ற நிலை ஏற்படக் காரணமாக இருந்ததாகவும், பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும். ஐந்து பொலீஸாரும் விசாரணைகளின் பின் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

கொழும்பில் பொலீஸ் தலைமையக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

பொது மக்களுக்கும் — பொலீஸாருக்கும் இடையில் இப்பகுதியில் ஏற்பட்ட கைகலப்புச் சம்பவத்தில் பத்துப் பொது மக்கள் அடிகாயங்களுக்கு இலக்கானார்கள் என்பதும், ஒருவர் பொலீஸாரின் சூட்டுக்கு இலக்காகி காயமுற்றார் என்பதும் தெரிந்தவையே.

அவ்வழியே போய்வரும் இளம் பெண்களை அப்பகுதி ''சென்றி''யில் நின்ற பொலீஸார் கேலிசெய்து வந்ததாகவும் —

அதையடுத்தே பொலீஸா

(5 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3451)

பதிவு செய்யப்படாத நல்ல நிலையிலுள்ள Honda, Super Cub 50, Chaly மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகேஸ்வரன் ஆசிரியர்' மே/பா சிவசுப்பிரமணியம், ஆசிரியர் விசவெட்டி, அளவெட்டி தெற்கு. [13069]

கற்பூரத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. ஜெற் இன்டஸ்ரீஸ், [கற்பகம் பிள்ளையார் கோவிலடி) விதானையார்வீதி, கோப்பாய்தெற்கு. (3460)

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. சிவஐங்கரன், விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3467)

5. 5 HP, 3" 3 Phase, தண்ணீர் இறைக்கும் இயந்திரம் புதியது. விற்பனைகு உண்டு தொடர்பு: J. A செல்வரட்ணம், 48/2, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [13091]

## விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

சோதிட மலர் (வைகாசி இதழ்) [15-05-90]இம்மாத பலன், சோதிட அறிவுப் போட்டி,வெளிநாட்டு வாய்ப்புண்டா? மற்றும் வழக்கமான எல்லா அம்சங்களுடனும் வெளிவந்து விட்டது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [3464]

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு மாத Hyline வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 16-05-90 புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (3449)

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாள குல 25 வயதுடைய டென்மார்க்கில் பணிபுரியும் சிறந்த வருமானமுள்ள ஏக புத்திரனுக்கு அழகும், கல்வியாற்றலும் உள்ள பிறப்பு எண் 3 அல்லது 6, 9 உள்ள 25 வயதிற்கு குறைவான மணமகள் தேவை ஜாதக,சீதன விபரங்களுடன் தொடர்பு: C/o 695, உதயன், கல்யாண முகவர்களும் தொடர்பு கொள்ளலாம். (3465

கனடாவில் நிரந்தரமாக வசிப்பவரும், வியாகரத்துச் செய்தவரும், வேளாள கத்தோலிக்கரும் இரு பிள்ளையின் தந்தையும் 42 வயதுடைய ஒருவருக்கு கல்யாணமாகத அல்லதுவிதவையான ஏறக்குறைய 35 வயதுடைய கத்தோலிக்க அல்லது இந்து வேளாள குல மணமகள் தேவை. கனடா செல்ல வேண்டும். விபரங்களுடன் 22-05-90க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். C/o உதயன் 123. [13082]

## இலிகிதர் தேவை

யாழ். மாநகர ஆட்டோ தொழிலாளர் சங்க காரியாலயத்துக்கு யாழ்ப்பாண மாநகரசபைக்குள் வசிக்கும் ஆண்மகன் உடன் தேவை. தொடர்பு: யாழ். ஆட்டோ சங்கத் தலைவர் ஆட்டோ தரிப்பு நிலையம், யாழ்ப்பாணம். (13074)

## புலமை பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 22-05-90 செவ்வாய் மு. ப 8. 00, 10.30 பி. ப 1. 30 ஆகிய நேரங்களில் நடைபெறும். ஆண்டு 4 தொடக்கம், ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புலமைப் பரிசில் வினாவிடை விற்பனைக்கு உண்டு. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (3466)

## A/L தாவரவியல்

அல்காக்களும்பங்கசுக்களும் ஓர் அறிமுகம் எழுதியவர் கலாநிதி அ. சிவவாலன் விலை ரூபா 35/- கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி/4494)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி பாரதி சபாரட்ணம்

15 — 05 — 1990

நாரந்தனை மேற்கைச் சேர்ந்த சபாரட்ணம் டெல்னி தம்பதிகளின் செல்வப் புதல்வி "பாரதி" தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று மீசாலை தெற்கில் உள்ள பெரியப்பா இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, ஐயா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, மாமாமார், மாமிமார், அண்ணாமார், அத்தான், அக்கா, அன்ராமார்' தாத்தாமார், பாட்டிமார், மற்றும் உற்றார், உறவினர்கள்

"பாரதிப் பாடலிசைத்த பாரதியின் கவித்திறமும்
பாரதியின் பட்டுவிரல் மீட்டு தந்தி யிசை நலமும்
பார்! ரதி இவளென்று பார்ப்பவர்கள் திசயிக்கும்
எழில் உருவம்
பாரதி நீ நீடு பெற்றுப் பாருலகுள்ள மட்டும்
வாழ்க!"

என்று வாழ்த்துகின்றார்கள். (3568)

# அரண் அமைக்கும் வேலையில் கோட்டை இராணுவத்தினர்!

யாழ்ப்பாணம், மே 15

யாழ். கோட்டையில் இலங்கை இராணுவத்தினர் காவல் அரண்களை அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கோட்டையின் முன் புறமாக தேவாலயத்திற்கு அருகிலும், பண்ணைப்பக்கமாகவும் புதிதாக இரு காவல் அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பழைய காவல் அரண்களும் சீர்செய்யப்பட்டு வருகின்றன. (ஒ-9)

# சிரமதானம்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை விஸ்தரிப்புக்கு சுவீகரிக்கப்பட்ட 3½ ஏக்கர் காணியை சிரமதானம் மூலம் முல்லை- கள்ளப்பாடு தெற்கு சனசக்திக் குழுக்களும், முல்லை தெற்கு— உணாப்பிலவு சனசக்திக் குழுக்களும் துப்புரவு செய்துள்ளன. (க-92)

# ACCOUNTANCY EXAM FOR Nov. Dec 1990

**C. I. M. A.**

| | |
|---|---|
| Stage I | 19-05-1990 |
| Stage II | 09-06-1990 |
| Stage III | 09-06-1990 |

**A. A. T. (London)**

| | |
|---|---|
| Prelim | 19-05-1990 |
| Inter | 09-06-1990 |
| Finals | 09-06-1990 |

**A. A. T. (Sri Lanka)**

| | |
|---|---|
| Stage I | 19-05-1990 |
| Stage II | July 1990 |
| Stage III | July 1990 |

**I. A. B.**

| | |
|---|---|
| Foundation | 19-05-1990 |
| Inter | 09-06-1990 |
| Finals | 09-06-1990 |

AND

**I. D. P. M.**

| | |
|---|---|
| Part I | 19-05-1990 |

உங்கள் பதிவுகட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

(Result Oriented Institute in North)

14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.

[சி-5026]

# அறிவித்தல்

## கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சிப் பிரிவுக்கான திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி பிரிவுக்கான திடீர் மரண விசாரணையாளர் ஒருவரை நியமிப்பதற்காக கீழ் 2ம் பந்தியில் காணப்படும் தகுதிகளை உடைய அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையப்பெற்ற விண்ணப்பங்கள் 1990 வைகாசி மாதம் 25ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. கீழ்க்காணும் தகுதிகளையுடையவர் என்பதற்குப் போதிய சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
   - அ விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் திகதியன்று வயது 30க்கு குறையாமலும் 65க்கு கூடாமலும் இருத்தல்.
   - ஆ. சிறந்த தேகாரோக்கியம் உடையவராய் இருத்தல்.
   - இ. விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராய் இருத்தல்.
   - ஈ. குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் மொழியில் கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
   - உ. மாதாந்த வருமானம் ரூபா 200க்கோ அதற்கு மேற்பட்டோ இருத்தல்.
3. விண்ணப்பகாரி அவருடைய விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.
   - அ. பிறப்புச்சான்றிதழ்
   - ஆ. கிடைக்கப் பெற்ற உயர்கல்வி தகுதிகாண் சான்றிதழ்
   - இ. வதிவிடம் பற்றிய சான்றிதழ்
   - ஈ. வருமானம் பற்றிய தகுதியான சான்றிதழ்
4. அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், கூட்டுறவு, உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுவோர் இப் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி அற்றவர்களாவர். உள்ளூராட்சி மன்றங்கள் பிரதிநிதிகளும் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்கள். இந்நியமனம் மூன்று வருடங்களுக்கு உரியது.
5. விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

கே மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

செயலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி,
1990 வைகாசி 07.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சிப் பிரிவுக்கான திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:
2. முகவரி:
3. நிரந்தர வதிவிடமும், அதில் வதியும் காலமும்:
4. (அ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் திகதியன்று வயது:
   வருடம்: மாதம்: நாள்:
   (ஆ) பிறந்த திகதியும், இடமும்:
5. விவாகமானவரா / விவாகமாகாதவரா?:
6. கல்வித்தகைமைகள்;
7. தற்போதைய தொழில்:
8. இதற்கு முன்னர் தொழில் செய்திராயின் அது பற்றிய விபரங்கள்:
9. தமது ஆதனத்தின் பெறுமானமும், விஸ்தீரணமும், விபரங்களுடன்:
10. மாதாந்த வருமானம்:
11. விண்ணப்பதாரி ஓர் கடனாளியாயின் அது பற்றிய விபரங்கள்:
12. விண்ணப்பதாரி ஏதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டணைக்கு உட்பட்டவரா?:
13. இப்பதவிக்காக பெற்றுள்ள வேறு தகைமைகள் இருப்பின் விபரம்:

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவைகள் என்றும், உண்மையானவைகள் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ______________ விண்ணப்பதாரியின் கையொப்பம்.

[சி-4512]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சான் செய்கைக்கு உதவி

மாங்குளாம், மே 15

கொக்கிளாய் கொக்குத்தொடுவாய்பகுதியில் கோடை போகக்கச்சான்செய்கைக்காக 100 ஏக்கர் நிலமும் பெரும போகச்செய்கைக்காக 500 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் ஈடுபடுவோருக்குஇலவசமாக விதைக் கடலைகள் வழங்கப்படும் எனவிடுதலைப்புலிகளின்கரையோரப்பிரதேசப் பொறுப்பாளர் ரகு தெரிவித்தார்.

இப்பயிர்ச் செய்கையில் ஆரம்ப காலம் தொட்டு அறுவடைக்காலம் வரை வேலை செய்பவர்களுக்கு நாளாந்தச் சம்பளமும், பயிர்ச் செய்கை இலாபமும் வழங்கப்படும். 50 பேர் கொண்ட குழு பங்கு பற்றும் கூட்டுறவு முறைக் கோடைகாலப்பயிர்ச்செய்கை ஜப்பான் நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. (ப-94)

# பொன்னாடை

யாழப்பாணம் மே 15

திருநெல்வேலி அரசடி அம்மன் கோவில் திருவிழாவில் தொடர்ந்துஇடம்பெற்ற "தேவி மகத்துவம்" தொடர் விரிவுரையை நிகழ்த்திய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குருமகா சந்நிதானத்தின் பிரதமசீடன் முத்தமிழ் மாமணி கந்தர் மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவுக்கு நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் பொன்னாடை போர்த்து பாராட்டி கௌரவித்தார்

கோண்டாவில்நெட்டிலைப் பிள்ளையார் கோவில் திருவிழாக்களிலும் இவர் சம்பூர்ண இராமயண தொடர் விரிவுரை நிகழ்த்தினார். இறுதிநாள் நிகழச்சியன்று இவரின் சைவ தமிழ்,இசைச் சேவையினைப் பாராட்டி மேற்படி கோயில் பரிபாலன சபை "இராமாயண கதா திலகம்"என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. (இ-7)

# தப்பிய பெண் கைதானார்

கொழும்பு,மே 15

கண்டி பொலீஸ் நிலையத்தில் இருந்து ஆண் வேடத்தில் தப்பிய பெண் தீவிரவாத சந்தேக நபர் தலாத்துஓயாவில் வைத்து ஊர்காவல் படை விரர் ஒருவரால் கைது செய்யப்பட்டார் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த போதே அப்பெண் கைது செய்யப்பட்டார். (உ-எ)

# தம்பலகாமத்தில்

தேனிசைச் செல்லப்பாவின் இன்னிசை நிகழ்ச்சி கடந்த வெள்ளியன்று தம்பலாகமத்தில்இடம்பெற்றது.

சனிக்கிழமை இந் நிகழ்ச்சி திருகோணமலையில் இடம் பெற இருந்த போதிலும் பெருமழை காரணமாக கடைசிநேரத்தில் இந்நிகழ்ச்சி கைவிடப்பட்டது, எனினும் முற்றவெளிமைதானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கக் கூடியிருந்தனர். (இ—155)

# செய்யது பீடி

இந்தியாவிலிருந்து கள்ளக் கடத்தல் மூலமாக கொண்டு வரப்படும் "செய்யது" பீடிகள் யாழ்ப்பாணத்தில் பெருமளவு விற்பனையாகின்றன. (க-72)

# கல்வி ஆலோசனை

மூத்த கல்விமான்கள், அறிஞர்கள் இடம்பெறும் கல்வி ஆலோசனைச்சபை ஒன்று ஜூன்மாதம் பண்டத்தரிப்பு கல்விக்கோட்டப்பிரிவில் அமைக்கப்படவுள்ளதாக உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (க-69)

# ஆசிரியர்கள் தேவை

ஓர்கன், கிற்றார் பயிற்றுவிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்:

பொதுச்செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்;

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி- 5028]

# அதிஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

யாழ்/ பலாலி உதயகலைவாணி சனசமூகநிலயத்தின் 21 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பாலர் பாடசாலை நிதிக்காக 12-05-1990 இல் தலைவர் M. கனகபுனிதராசா முன்னிலையில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டு இலக்கங்கள்:

முதலாம் பரிசு 730    இரண்டாம் பரிசு 533
மூன்றாம் பரிசு 1029

ஆறுதல் பரிசுகள்:
255 883 27 80 529

இங்ஙனம்:
—நிலைய நிர்வாகிகள்

(3565)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க

# இலங்கை நிருவாக சேவை (SLAS)

போட்டிப் பரீட்சைக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

## 2 ஆவது பிரிவு ஆரம்பம் 19-05-1990

(பிற் பகல் 2 — 5)

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் 18-05-90 ன் முன் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பட்டதாரிகளுக்கும் / அரச உத்தியோகத்தர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

★ இலவச பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்

# ASTAN Institute

166/1, Hospital Road, Jaffna.

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ஆம் மாடி)

[சி-5022]

## பொய்யாமொழி

**குறள்:**

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி

**பொருள்:**

காமத்தால் துன்புற்று (காதலியின் அன்பு பெறாமல்) வருந்தினவர்க்குக் காவல் மாடலூர்தல் அல்லாமல் வலிமையான துணை வேறொன்றும் இல்லை.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.　　தொலைபேசி: 2288
15 - 05 - 1990　　த. பெ இலக்கம் 25

# கல்வி அறிவூட்டுவதற்கு தொண்டர் நிறுவனம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை, யாழ். மத்திய கல்லூரியில் படித்த இளைஞர் தினம் கொண்டாடப்பட்டது. நீதி விசாரணை எதுவும் இல்லாமல், அராஜகத்தனமாக, அநீதியான முறையில் கொலை செய்யப்பட்ட படித்த இளைஞர்களையும், கற்றறிஞர்களையும் நினைவு கூருமுகமாக இத்தினம் கொண்டாடப்பட்டதாக அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். படித்த இளைஞர் தினம் ஈழத்தில் அடியெடுக்கப்பட்டு, சர்வதேச ரீதியில் கொண்டாடப்பட வேண்டும் என்பது அவர்களின் பேரவா. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அவர்கள் வெற்றி அடைந்தால் அதன் மூலம் நல்ல பணிகளைச் செய்யக்கூடியதாக இருக்கும்.

ஈழத் தமிழ் மண்ணில் நடந்த அநியாயக் கொலைகள் பலவிதம்; பல ரகம். பலதரப்பாரும் அவற்றைப் புரிந்தவர்கள். கல்வி அறிவுள்ள ஒரு சமூகமாக இருக்கும் நிலையிலிருந்து தமிழர்களை அறிவில்லாதோர் சமூகமாக்க வேண்டும் என்ற விஷ நோக்குடனும் பல கொலைகள் நடத்தப்பட்டன. அவ்வாறு மரணித்தவர்களில் மாணவர்கள், புத்திஜீவிகள் ஆகியோரும் அடங்குவர்.

அந்த நயவஞ்சகத் தனத்துக்கு ஈடு கொடுத்துக் கல்வி அறிவுள்ளோர் எண்ணிக்கையை ஈழத்தில் பெருக்க வேண்டும். அதுவே படித்த இளைஞர் தினம் கொண்டாடுவதன் நோக்கமாக இருக்க வேண்டும். கோபால கிருஷ்ணன் ஞாபகார்த்த நிதியம் போல பல நிதியங்கள் தொடங்கப்படலாம். அவை ஒருங்கிணைக்கப்பட்டு, கல்வியறிவூட்டும் ஒரு தொண்டர் நிறுவனமாக உருவாக்கப்படலாம்.

அந்த நிறுவனம் ஆற்றல், திறமை இருந்தும் கல்வி வசதி பெற முடியாத சிறுவர், இளைஞர்களின் கல்விக்கு உதவலாம். பணவசதி இல்லாமல் பாடசாலைப் பக்கம் போக முடியாமல் இருந்த முதியவர்களுக்கும் கல்வி ஊட்டலாம்.

மேற்சொன்ன இரண்டு சாராரிலும் மாணவர்கள், இளைஞர்கள் தரப்புக்குக் கூடிய கவனமும் அக்கறையும் செலுத்தப்பட வேண்டும்.

ஏனெனில் இன்றைய இளம் சந்ததியினரில் பெரும்பாலானோர் போதிய கல்வி அறிவில்லாதவர்களாகவே இருக்கின்றனர் என்பது கசப்பான உண்மை. பெரும் எண்ணிக்கையானோர் இடை நிலைக் கல்வியைக் கூடப் பூர்த்தி செய்யாதவர்களாகவே இருக்கிறார்கள்.

அரசியல் புறக் காரணிகள் மட்டும் தான் இத்தகைய நிலை ஏற்பட்டுவிடக் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. பணவசதி இல்லாமை, குடும்பப் பாரத்தைத் தாங்க வேண்டியதால் இளம் வயதிலேயே தொழிலில் சேர்தல்போன்ற சமூகப் புறக்காரணிகளின் பங்கு அதிகம் உண்டு.

கல்வியறிவூட்டும் பணிகளில் சமூகப் புறக்காரணிகளால் இளையோர் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் மேலே குறிப்பிட்ட கல்வி சம்பந்தமான தொண்டர் ஸ்தாபனங்கள் ஆரம்ப பணி சமூகப் புறக்காரணிகளால் பாதிக்கப்படும் இளைஞர்களுக்குக் கல்வியறிவு ஊட்டுவதாகவே இருக்க வேண்டும்.

இன்றைய இளைஞர் சமுதாயம் கல்வி அறிவு குறைந்ததாக, கல்வி அறிவிலலாததாக மாறிவிட்டால் அதன் தாக்கமும் பாதிப்பும் மேலும் பல சந்ததிகளுக்குத் தொடரும். தமிழினத்தின் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் பல பாரிய பாதிப்புகளை உண்டாக்கும்

தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்ற நிலையை நிறுத்தமுடியாது போகும். அறிவுள்ள விவேகம் உள்ள சமுதாயமே தலைநிமிர்ந்து நிற்க முடியும். உலக மக்களுடன் சமதையாக முன்னேறவும் முடியும்.

மேலை நாடுகளில் தத்தமது மக்களுக்குச் செய்ய வேண்டிய பல பணிகளை அங்குள்ள தொண்டர் ஸ்தாபனங்களே செய்கின்றன. தனியார் நிதியங்களே அவற்றுக்கு நிதிவலுவூட்டுகின்றன. தமிழ் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் அரச உதவியை நம்பி இருந்து ஏமாறவோ, காலங்கடத்தவோ இது உகந்த நேரமல்ல வெளிநாட்டு உதவியையும் சகலருக்கும் எதிர்பார்க்க முடியாது. எம்மில் வசதியுள்ளவர்கள் நிதியங்களை உண்டாக்கிச் சமூகத்துக்கு உதவவேண்டும்.

# சிறந்த எதிர்கால சமுதாயம் ஆசிரியர்களின் கையில்

புதுக்குடியிருப்பு மே 15

''சிறந்த ஓர் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் புனிதமான பொறுப்பு ஆசிரியர்கள், குறிப்பாக சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் கையிலேயே தங்கியுள்ளது. பிஞ்சு உள்ளங்களைக் கல்வியில் பதிய வைக்கும் போது சில நுட்பங்களைக் கையாள வேண்டும்.''

மூளாய் சிறுவர் பாடசாலை நிறுவனத்தால், புதுக்குடியிருப்பு பயிற்றப்படாத சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்பில் தலைமை வகித்து உரையாற்றிய புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. க. இராசரட்ணம் இவ்வாறு உரையாற்றினார்.

பயிற்சி வகுப்பை, மூளாய் சிறுவர் பாடசாலை நிறுவனப் பணிப்பாளர் திருமதி. பீ. இராஜேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அவர் தமதுரையில் பயிற்சி வகுப்பின் நோக்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## உண்டியலை உடைக்க பாம்பு தீண்டியது

குருநகர், மே 15

உண்டியலை உடைத்துப் பணத்தைத் திருட முயன்றவர் பாம்புக் கடிக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை அல்லைப்பிட்டி நீச்சல் தடாகப் பகுதியில் நடைபெற்றது.

அப்பகுதியில் புதிதாகக் குருநகர் சிறகு வலைத் தொழிலாளர்களால் நிறுவப்பட்டுள்ள புனித அந்தோனியார் சொரூபப் பீடத்தில் உண்டியல் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது.

அந்த உண்டியலில் திருட முனைந்தவருக்கே பாம்பு கடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி உண்டியல் இதற்கு முன்பும் பல தடவைகள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ - 51)

## இன்னும் கரை திரும்பவில்லை

யாழ்ப்பாணம், மே 15

கடந்தமாதம் 21ஆம் திகதி மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற இருசகோதரர்களான ஜெயரஞ்சன் (25 வயது), பாலகிருஷ்ணன் (18 வயது) ஆகிய இரு சகோதரர்களும் இன்னும்கரை திரும்பவில்லை.

இதுதொடர்பாக காரைநகர்க் கடற்படை அதிகாரி, பலாலி இராணுவ முகாம் இணைப்பதிகாரி, யாழ். மாவட்டப் பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆயினும் இதுவரை எத்தகவலும் கிடைக்கவில்லை என்றும் காணாமற் போன இளைஞர்களின் தந்தை திரு. கறுவல்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார். [இ-]

## யுனிசெப் அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், மே 15

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யுனிசெப் அதிகாரி ஜனாப் ஹமீட் யுனிசெப் மாநகர குறைந்த வசதி வழங்கும் திட்டமிடல் அதிகாரி ஜனாப் ஹுசெயின் ஆகியோர் சேதமடைந்த மாநகர சபை அலுவலகம் நூலகக்கட்டடங்களை நேற்றுப் பார்வையிட்டனர்.

இவர்கள் நேற்று மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ் முகாமையாளர், திரு. ஜோசேப் மரியான் ஆகியோருடன் சேதமடைந்த மாநகர அலுவலகம், நூலகம், தொலைத்தொடர்பு திணைக்கள கட்டடங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

அத்துடன் தேவரிக் குளம் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் யுனிசெப் திட்டங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். [இ-3]

கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் பாடசாலைகள்:

# ஆசிரியர் - மாணவர் நிலத்தில் அமரும் பரிதாபம்

## தளபாட வசதி இல்லையாம்

முல்லைத்தீவு மே 15

தற்காலிக கொட்டகையில் இயங்கும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் தளபாட வசதிஎதுவும் இல்லை.

ஆசிரியர்களும் நிலத்தில் அமர்ந்தே கல்வி புகட்ட வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்துவருடங்களாக இயங்காத இந்தபாடசாலைகளுக்கு கட்டடங்கள்இல்லை.

கல்வித்திணைக்களம் புனர்வாழ்வு அமைச்சிடம் பணம் பெற்று ஓலைகளால் வேயப்பட்ட தற்காலிக கொட்டகைகளை அமைத்துள்ளது.

அந்தக் கொட்டகைகளுக்கு நிலத்துக்கு சீமெந்து கூடப் போடப்படவில்லை.

மாணவர்களும் ஆசிரியர்களும் மண் நிலத்திலேயே அமருகின்றனர்.

இந்த மூன்று பாடசாலைகளிலும் 1000 பிள்ளைகள் கல்வி பயிலுவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தீவக குடிதண்ணீர் திட்டம் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

வேலணை மே 15

தீவக குடிதண்ணீர் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று வேலணை உதவி அரச அதிபர் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

வேலணை பதில் உதவி அரச அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தலைமை வகித்த இக் கூட்டத்தில் இக் குடிதண்ணீர் திட்டம் நீண்டகால அடிப்படைத்திட்டம் உடனடித் திட்டம் என்றுஇரண்டாக வகுக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அதுடன் குடிதண்ணீரின்றிதவிக்கும் புங்குடுதீவு மக்களுக்காக உதவும் பொருட்டு கடல் நீரை குடிநீராக்கும் செயற்பாடு குறித்தும் ஆராயப்பட்டது.

தீவகத்தின் விடுதலைப் புலிகள் இயக்க அரசியற் பொறுப்பாளர் திரு காஸ்ரோ யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் பாலச்சந்திரன், திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை, திரு. சிவச்சந்திரன். யாழ் சச்சேரி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திரு. க.பாலகிருஷ்ணன் வேலணை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன், கல்வி அதிகாரி திரு. க. சண்கநாதன் மகா ராஜா நிறுவன பிரதிநிதிகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் திரு. நா. தனபாலசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (ப - 167)

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு 3,873 சுவர்ணபூமி உறுதிகள்

கிளிநொச்சி, மே 15

சுவர்ணபூமி உறுதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 3873 உறுதிகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான உறுதிகள் கிளிநொச்சி காணி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இதில் இதுவரை 825 உறுதிகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

மீதி 3048 சுவர்ணபூமி உறுதிகளும் ஜூலை மாத இறுதிக்குள் வழங்கப்பட்டு விடும் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-76)

### கோரிக்கை

கொழும்புத்துறை, மே 15

பாதிக்கப்பட்ட அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஆறுமாதத்திற்கான 50 வீத சம்பள நிவாரணக்கொடுப்பனவை வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வழங்குமாறு கோரும் மகஜர்ஒன்றை வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்திடம் ஊழியர்கள் சமர்ப்பித்துள்ளனர். (க-30)

### சுகாதாரப் பிரிவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி பிரதேச சுகாதார பிரிவுச் செயலகம் நாளை புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படும். (க-74)

### நிவாரணம்

நெடுந்தீவு மே 15

நெடுந்தீவைச் சேர்ந்த 354 குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சி நிவாரணப் பணமான 4000 ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது- (க-111)

# இன்பருட்டியில் பௌர்ணமிவிழா

வல்வெட்டித்துறை, மே 15

கடந்த வெள்ளி இரவு 8 மணியளவில் இன்பருட்டி காண்டீபன் விளையாட்டரங்கில் பௌர்ணமி தின நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, அபிநயப் பாட்டுப் போட்டி, பொது அறிவுப் போட்டி என்பவற்றுடன் விசேட நிகழ்ச்சியாகப் பட்டிமன்றமும் இடம் பெற்றது.

பட்டிமன்றத்தில் பெண்கள் தொழில் பார்ப்பது நன்மையா? அல்லது தீமையா? என்னும் விடயம் பற்றிக் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இறுதியில் பெண்கள் தொழில் பார்ப்பது நன்மை என்ற கருத்துக்களைக் கூறிய தரப்பினரே வெற்றியீட்டியதாக நடுவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

பொது அறிவுப் போட்டியில் மஞ்சள் அணி இருபது புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது. இந்த அணியைச் சேர்ந்த அ. தயாளன் பதினேழு புள்ளிகளைப் பெற்று அணியின் வெற்றிக்கு உதவினார். (இ160)

# எம் பி.பி.எஸ் பரீட்சையில் தங்கப்பதக்கம் பெற்றோர்

யாழ்ப்பாணம் மே 15

1990 ஏப்ரல் எம். பி. பி. எஸ். பரீட்சையில் செல்வி. எஸ். சுவாமிநாதன் மகப்பேற்றியல், பெண் நோயியல் ஆகியவற்றுக்கான சென்ற் ஜோர்ஜ் தங்கப்பதக்கம், சிறந்த சாதனைக்கான டாக்டர் வைத்தியநாதன் நடராசா நினைவுப்பரிசு, மருத்துவத்துறைக்கான டாக்டர் எஸ். ராமநாதன் தங்கப்பதக்கம் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

குழந்தை நோயியலுக்கான டாக்டர் வி. ரி. பசுபதி தங்கப்பதக்கத்தை செல்வி எஸ். குமாரசாமியும், சத்திரசிகிச்சைக்கான டாக்டர் எஸ். சுப்பிரமணியம் (பி. எஸ்) நினைவுத் தங்கப்பதக்கத்தை செல்வி ரி. துரைராசாவும் பெற்றுள்ளனர். [ச]

## இந்து இளைஞர் கொடிதினம்

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் இந்து இளைஞர் வருடாந்தகொடித் தினம் இன்று செவ்வாய்க் கிழமை அனுஷ்டிக்க படுகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் கொடித்தின வைபவத்தில் பேரவைத்தலைவர் திரு. வே. கெ. தவபாலன் முதலாவது கொடியை நல்லை ஆதீனகுரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுக்கு வழங்கி விற்பனையை ஆரம்பித்து வைப்பார். [இ-30]

## நெடுங்கேணியில் தேவாலயம்

நெடுங்கேணியில் புதிதாக தேவாலயம் அமையவிருக்கும் காணியை அவ்வூர்ப் பொது மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். தேவாலயத்தை கூடிய விரைவில் அமைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (க-108)

# செய்திக்கொத்து

### 3 கோடி ரூபா நஷ்டம்

மாங்குளம் மே 15

கிளிநொச்சியில் முகாமிட்டிருந்த இந்தியப்படை மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது பல கட்டடங்கள் சேதமாக்கப்பட்டதால் இப் பகுதியில் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (ப-94)

### ஓய்வூதியம் கிடைக்கவில்லை

வல்வெட்டித்துறை மே 15

உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற சிலர் கடந்த ஐந்தாறு வருடங்களாக ஓய்வூதியம் பெறமுடியாது சிரமப்படுகின்றனர். [ப-160]

### புலிக்கொடி ஏற்றப்பட்டது

வெற்றிலைக்கேணி மே 15

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிச் சந்தியில் கடந்த வியாழன் காலை நடைபெற்ற வைபவம் ஒன்றில் புலிக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

பெரிய பச்சிலைப்பள்ளிக் கிராமத்தவர்களது வேண்டுகோளை ஏற்று பிரதம விருந்தினராகப் பா[illegible] பகுதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி [illegible] பாளர் விக்னம் பலத்த கரவொலியின் மத்தியில் கொடியை ஏற்றி உரையாற்றினார். [ப-ரி]

### வேங்கைகளின் நினைவஞ்சலி

வல்வெட்டித்துறை மே 15

வீரமரணம் எய்திய வேங்கை ரவாஸ் கடற்புலி வெங்கடேஸ் ஆகியோரது இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் அண்மையில இன்பருட்டிக் கடற்கரை மைதானத்தில் திலீபன் நினைவுத் தூணருகே நடைபெற்றது.

இவ் வைபவத்தில் கடற்புலி வெங்கடேஸின் தாயார் திருமதி ச. இரத்தினேஸ்வரி உரையாற்றினார். [ப-160]

### சைக்கிள் தரிப்பிடம்

புங்குடுதீவு, மே 15

பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆதரவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு 30ஆயிரம் ரூபா செலவில் புதிய சைக்கிள் தரிப்பிடம் ஒன்றை பாடசாலை நிர்வாகம் அமைத்துள்ளது. (க-ரி)

### நாவாந்துறையில் நாட்டுக் கூத்து

[illegible]திமுனை கலைக் [illegible] நாடகக் கலை[illegible] பா'' தென்மோடி நாட்டுக் கூத்து நாளை புதன்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரிஸ் முத்தமிழ் அரங்கில் நடைபெறும்.

யாழ்ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்துகொள்கின்றார்.

காலஞ்சென்ற கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி எழுதிய இந்த நாடகத்தை யாழ் பல்கலைக்கழகத்தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ பாலசுந்தரம் தயாரித்து நெறியாள்கை செய்துள்ளார் திரு. அந்தோனி சவரிமுத்து நாடகத்தின் அண்ணாவியாராக இருக்கின்றார். (க)

### முல்லைத்தீவில் மழை

முல்லைத்தீவு, மே 15

முல்லைத்தீவிலும் ஏனைய பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக மழை தாராளமாகப் பெய்தது. (இ 92)

### சாவகச்சேரியில் தேனிசை செல்லப்பா

கைதடி மே 15

தமிழகத்து எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் இசைநிகழ்ச்சி இம்மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நடைபெறும். (க-74)

# வாசகர் திருமுகம்

## வீதி ஒழுங்கு பற்றி சில ஆலோசனைகள்

தற்பொழுது வீதி ஒழுங்கு பெரும் பிரச்சினையாகியுள்ளது. இது பற்றி சில ஆலோசனைகள்:

வீதியில் தடித்த வெள்ளைக் கோடுகளை அல்லது செம்மஞ்சள் கோடுகளை இட்டு திரும்பலுக்கான திசைகள் அம்புக்குறிகள் மூலம் காட்டப்பட வேண்டும்.

இதில் கடமையாற்றுபவர்கள் நிறங்களையுடைய சீருடையைத் தவிர்த்து வெண்ணிற உடைகளை அணிதல் வேண்டும். இது விஞ்ஞான ரீதியாக அவர்களுடைய உடல்நிலையை வெயிலினால் பாதிக்காது காப்பதுடன் வாகன ஓட்டிகளும் அடையாளம் காண துணைபுரியும்.

சைகைக்கு உபயோகிக்கும் கைகளில் வெள்ளைநிற கையுறைகள் அணியப்பட்டு இருக்க வேண்டியது கட்டாயம் ஆகும்.

சைகளிலே நில் செல் என்று சிவப்பு நிறத்தில் எழுதப்பட்ட வட்ட வெள்ளைத் தட்டுக்களைக் காண்பிப்பதும் சிறந்தது.

இதனை விட பெருகிவரும் வாகனங்களின் தொகையைக் கருத்தில் கொண்டு வீதிகள் அகலமாக்கப்பட வேண்டும்.

சந்தியின் நடுவில் வட்டமான மேடைகள் அமைத்தல் வேண்டும். இவை வாகன போக்குவரத்தை சீராக்குவதுடன் கடமை புரியும் ஒழுங்குகளையும் குழப்பத்தில் ஆழ்த்த மாட்டாது.

சி. ரகுநாத்,
காங்கேசன்துறை

## கடமை உணர்வுக்கு ஓர் உதாரணம்

யாழ்ப்பாண கச்சேரியில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பெற்ற அனுபவம் எங்களை மகிழ்வித்தது.

எங்களிடம் உள்ள மோட்டார் வாகனம் பதிவு சம்பந்தமாக போய் திரும்பிவிட்டோம். பல வாரங்களுக்குப் பிறகு எங்கள் வாகனப் பதிவுப்புத்தகம் தவறிவிட்டிருந்ததால் வந்து பெற்றுக்கொள்ளவும் என்று அங்கு கடமையாற்றும் ஒரு அம்மணி காட் போட்டிருந்தார்.

பல வேலைகளுக்கிடையில் இப் பதிவுப் புத்தகம் தவறியதே எங்களுக்குத் தெரியவில்லை. இப் புத்தகம் எங்களிடம் இல்லாவிட்டால் கார் வைத்திருந்தும் பிரயோசனம் இல்லை. தமது கடமைக்கு அப்பாலும் பணிபுரிபவர்களை பார்க்க நமது நாட்டுக்கு இது மிக அவசியம் என்று தோன்றுகிறது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொற்பெருக்காற்றுவதில் பல அதிகாரிகள் வல்லவர்கள். ஆனால் இங்கு ஒரு அரசாங்க ஊழியர் அதை செயல்படுத்துவதைப்பார்த்து மற்றவர்களும் பின்பற்றினால் எத்தனையோ ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

சுவாமி சித்ரூபானந்தா,
பருத்தித்துறை.

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி இந்து இளைஞர் மன்ற ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் இம் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும். (க-31

# கண்டதும் கேட்டதும்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு கடந்த 8 ஆம் திகதி நாடுமுழுவதிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்படிருந்தன. அவற்றுள் இரத்த தான நிகழ்ச்சியும் ஒன்று.

முல்லைத்தீவில் சுமார் 100 பேர்வரை இரத்த தானம் செய்ய முன்வந்தனராம். ஆனால் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இதற்கான வசதிகள் இல்லாததால் இது கைகூடாது போயிற்று.

அன்று யாழ்ப்பாணத்திலே 64 பேர் மட்டுமே இரத்த தானம் செய்தபோது சனத்தொகை குறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் இரத்த தானம் செய்ய முன்வந்தது வரவேற்கத்தக்கதே.

வாகன வசதி செய்தாவது இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்திருந்தால் யாழ். ஆஸ்பத்திரியில் அடிக்கடி ஏற்படும் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்க உதவியிருக்கும்.

செய்திலோலன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### வேலுப்பிள்ளை அன்னபூரணம்

தோற்றம்: 16 - 04 - 1904　　மறைவு: 15 - 04 - 1990

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காக இருந்து எம்மை அன்புடன் ஆதரித்து உலகினிலே ஒளி பெறச் செய்து எம்மையெல்லாம் நீங்காத துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றீர்களே. உங்கள் ஆத்மா சாந்தியடைய குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக் கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாலாவோடை,
காரைநகர்.　　[3543]

## 1 ஆம் வருட ஞாபக ஆராதனை



திருமதி. கிறேஸ் புஸ்பராணி தேவதாசன்
( ஓய்வு பெற்ற ஆசிரியை )

தோற்றம் 18 - 8 - 1919　　மறைவு 15 - 5 - 1989

என் பிதாவின் வீட்டில் அனேக வாஸ்தலங்கள் உண்டு.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப் பிள்ளைகள்
மருமக்கள் சகோதரர்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.　　( 13068 )

## ஓராண்டு நினைவஞ்சலி



### மு. நவரட்ணராஜா

மலர்வு: 18 - 11 - 1945　　உதிர்வு: 15 - 05 - 1989

ஆறாத துயரினிலே ஓராண்டு கழிந்ததுவே
மாறாத நினைவுடனே மண்தனிலே வாழுகிறோம்
நாளென்ன பொழுதென்ன
உம் ஆத்ம சாந்திக்காய்
நாயகனாம் யேசுவின் தாள் பற்றி நிற்கின்றோம்

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்.

10 A, மன்னார் வீதி,
வவுனியா.　　[3558]

காஷ்மீர் - பஞ்சாப்புக்கு விஜயம் செய்ய

# சர்வதேச மன்னிப்புச் சபைக்கு

# இந்திய அரசாங்கம் அனுமதி மறுப்பு

### வேண்டுமானால் பாகிஸ்தான் எல்லை ஊடாக வரலாம் என்று சிங் கிண்டல்

புதுடில்லி மே 14

பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களுக்கு விஜயம் செய்ய சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

இப்படி வி பி. சிங் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபையினர் செல்லவேண்டுமானால், அவர்கள் பாகிஸ்தான் எல்லைப் புறத்தினூடாகத் தான் பிரவேசிக்க வேண்டும்.

எமது உள்நாட்டு விவகாரத்தில் வெளியார் தலையீட்டுக்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

இப்படி பிரதமர் சிங் சொன்னார்.

இதனிடையில்- பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் உள்ள இந்தியக் கிராமப்புற மக்களை அங்கிருந்து வேறு பகுதிகளுக்கு இடம் பெயரச் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை என்று உள்துறை அமைச்சர் முப்தி செய்யத் முகம்மத் நேற்று அறிவித்தார்.

ஊடுருவல்காரர்களை கைது செய்ய இந்திய படைகளுக்கு எல்லைப் புற மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைச்சர் முப்தி செய்யத் முகம்மத் சொன்னார்.

இதே வேளை - காஷ்மீர் மாநில பிரச்சினையில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டுக்கு அரபு நாடுகளின், ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பிரதமர் பெனாசிர் பூட்டோ ஈடுபட்டுள்ளார்.

இதற்காக எட்டு இஸ்லாமிய நாடுகளுக்கான 9 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பெனாசிர் செவ்வாய்க்கிழமை இஸ்லாமபாத்தை விட்டுப் புறப்படுகிறார்.

ஈரான், துருக்கி, சிரியா, ஜோர்தான், வடயேமன், எகிப்து, லிபியா, ருனிஸியா ஆகிய நாடுகள் இப்பட்டியலில் உள்ளன.

ஜூனில் ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கு பெனாசிர் பூட்டோ தனது இரண்டாம் கட்ட சுற்றுப் பயணத்தை மேற் கொள்வார்.

இந்தியாவுடனான யுத்தம் ஒன்றுக்குத் தேவையான இராணுவ, நிதி உதவிகளைக் கோருவதுதான் இந்த விஜயத்தின் நோக்கமா? என்று கேட்டதற்கு- ''இஸ்லாமிய நாடுகளுடனான பேச்சின் போது எல்லாச் சாத்தியக் கூறுகளும் ஆராயப்படும்'' - என்று பெனாசிர் பதிலளித்தார். (எ)

பாகிஸ்தானுடன்

# அணுகுண்டுயுத்தம் வந்தாலும் அஞ்சமாட்டோம் - வி. பி. சிங்

### ஹொங்கொங் பத்திரிகைக்கு பேட்டி

புதுடில்லி மே 14

பாகிஸ்தானுடன் அணுகுண்டு போர் வந்தாலும் அஞ்சமாட்டோம் என்று பிரதமர் வி. பி. சிங் கூறினார்.

பாகிஸ்தான் போர் அபாயம் குறித்து ஹொங்கொங் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திரு. சிங் இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் மக்களுடன் அரசு நடத்தும் எந்த ஆலோசனையிலும் பாகிஸ்தானுக்கு இடமளிக்கமாட்டோம் என்றும் திரு.வி.பி. சிங் சொன்னார். (எ)

# இந்திய - பாக் யுத்தம் மூண்டால்

# அணுகுண்டு வீசப்படுவது நிச்சயம்?

### அமெரிக்க நிபுணர்கள் அச்சம் என்று 'டைம்' தகவல்

இந்தியா - பாகிஸ்தான் தகராறு மோதலில் முடியுமானால் அதில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படக் கூடிய ஆபத்து உண்டு.

1945க்குப் பிறகு இத்தகைய அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் சூழ்நிலை உருவாகும் என்ற அச்சம் நிலவுவதால் அமெரிக்கா, பாகிஸ்தானுக்கான முக்கிய ஆயுதங்களின் விநியோகத்தை உடனே நிறுத்தி விட வேண்டும் என்று செலிக் ஹரிசன் என்ற பிரபல அமெரிக்க அறிஞர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச அமைதிக்கான கார்னகி அறக்கட்டளையின் தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான நிபுணரான அவர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான தகராறில் நம்பிக்கைக்குரிய மத்தியஸ்தர் நிலைக்கு அமெரிக்கா தன்னை உயர்த்திக் கொள்ள பாகிஸ்தானுக்கு வழங்கி வரும் தனது முக்கிய ஆயுதங்களின் விநியோகத்தை நிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று 'டைம்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் கோரியுள்ளனர்.



வி.பி. சிங்

1982 க்குப் பிறகு300 கோடி டாலர் மதிப்புள்ள இராணுவ உதவிகளை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு வழங்கி வந்துள்ளது. இதனைச் சுட்டிக் காட்டியுள்ள 'டைம்,' இந்தியா - பாகிஸ்தான் சண்டை மூளுமானால் அணுகுண்டுகள் பயன்படுத்தக்கூடிய ஆபத்து உண்டு என்று இராணுவத் துறை அறிஞர்கள் பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவிடமும் பாகிஸ்தானிடமும் அணு ஆயுதங்கள் உண்டு என்றும் பரவலாக நம்பப்பட்டு வருவதாகவும் 'டைம்' கூறியுள்ளது.

வல்லரசுகள்

தென்கிழக்காசிய [illegible] காப்பு நிலை குறித்து பல ஆய்வு நூல்கள் எழுதியுள்ள இலினோயிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்டீவன் கோஹென் கூட இதேவிதமாக அச்சம் தெரிவித்துள்ளதை 'டைம்' மேற்கோள் காட்டியுள்ளது

> காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியா- பாகிஸ்தான் நாடுகளின் யுத்த சூழ்நிலை தொடர்ந்து நிலவுகிறது. இது பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

இந்திய-பாகிஸ்தான் யுத்தம் மூண்டால் வல்லரசுகள் நேரடியாக சம்பந்தப்படாத ஓர் அணுவாயுதச் சிக்கல் நிலை முதல்முறையாக உருவாகலாம் என பேராசிரியர் கூறியுள்ளதாக அந்த சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

''அணு ஆயுத மோதல் ஏற்படும் என்று நான் கருதவில்லை ஒரு யுத்தம் மூளும் என்றுகூட நான் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் அப்படி ஒரு யுத்தம் மூண்டால் அதனால் தென்கிழக்காசியாவே அணு ஆயுதமயமாகிவிடக் கூடிய ஆபத்து உண்டு என்பதை இந்தியாவும் பாகிஸ்தானும் உணர்ந்தே இருக்கின்றன-என்று கோஹென் மேலும் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து கிடைத்த செய்திக் கட்டுரையையும் 'டைம்' வெளியிட்டுள்ளது. அதில் காஷ்மீர் பிரச்சினையில் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு குறித்த ஐ நா. தீர்மானத்தை அமுல்படுத்தக்கோரும் தனது நிலைக்கு பாகிஸ்தான் போதிய ஆதரவு திரட்ட முடியவில்லை என அந்தச் செய்திக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியின் 'தலைவர்' சாதார் முகம்மது அப்துல் கயாம் கர்னே இப்படிக் கூறியுள்ளதாக அக்கட்டுரை தெரிவித்தது.

நாங்கள் உலக ஆதரவைத் திரட்ட முயன்றோம். ஆனால் அதில் இதுவரை வெற்றி பெற முடியவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நேரடி மோதல் ஏற்படுமானால் இந்தியாவின் படை வலிமைக்கு முன் தங்களால் தாக்குப் பிடிக்க முடியாதுளன பாகிஸ்தான் ஆயுத [illegible] பாகிஸ்தானியர்கள் அப்படி [illegible] 'டைம்' சுட்டிக்காட்டியுள்ளது.

காஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு உதவ வேண்டுமானால் கடந்த 10 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்து உதவியதுபோல அதிக ஆபத்தில்லாத வழிகளை பாகிஸ்தான் அரசு பின்பற்றலாம் என பாகிஸ்தான் அரசாங்க இராணுவ வட்டாரங்கள் கூறிவருவதாக 'டைம்' மேலும் கூறியது.

இதனால்தான் ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியினர் போன்ற தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குள் புகுந்து ஆயுதப் பயிற்சி பெற்று ஆயுதங்களையும் வாங்கிக் கொண்டு காஷ்மீரில் உள்ள தங்கள் தளங்களுக்குத் திரும்பக்கூடியதாக இருக்கிறது என்று 'டைம்' மேலும் கூறியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் பிரிவினைவாதிகள் மதச்சார்பற்ற தன்மையை விட்டுவிட்டு இப்போது சுதந்திர இஸ்லாமிய நாடு ஒன்றை உருவாக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகிறார்கள் எனவும்



பெனாஸிர்பூட்டோ

இதன்மூலம் இஸ்லாமிய நாடுகளின் நிதி உதவி முதலான உதவிகளைப் பெறமுடியும் என்ற நோக்கத்துடன் பிரிவினைவாதிகள் தங்கள் நிலையை மாற்றிக் கொண்டிருப்பதாகவும் 'டைம்' கூறியுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் தகராறு மோசமடைந்தால் அதில் தலையிட வாஷிங்டனிலோ அல்லது வேறு எங்குமோ எவரும் கிடையாது என அது மேலும் தெரிவித்தது.

இரு தரப்பினர் மத்தியிலும் பரஸ்பரம் சந்தேகமும் தகராறும் வலுத்தால் நாங்கள் தலையிடுவதற்கும் ஓர் எல்லை உண்டு என்று அமெரிக்க அரசு அதிகாரி கூறியிருப்பதையும் அது மேற்கோள் காட்டியுள்ளது.

★ மே 31 இல்

# இன்னும் ஒரு தொலைநோக்கி விண்ணுக்கு அனுப்பப்படுகிறது!

கேப்கனவரல் மே 14

கண்ணுக்கு தெரியாத பிரபஞ்ச மர்மத்தைக் கண்டறியும் பணியில் இன்னும் ஒரு எக்ஸ்-ரே தொலைநோக்கி விண்ணுக்குஏவப்படவுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதி எக்ஸ்-ரே தொலைநோக்கிகளுடன் ரோயென்ட்ஜென் செய்மதி கேப்கனவரல் விண்வெளி நிலையத்தில் இருந்து விண்ணுக்கு ஏவப்படவுள்ளது.

மனிதன் இயக்காத ரொக்கெட் ஒன்று இச் செய்மதியை விண்ணுக்கு எடுத்துச் செல்லும்.

அமெரிக்கா மற்றும் ஜேர்மன் விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சி இது.

விண்ணில் உள்ள எக்ஸ்-ரே கதிர்களைக் கண்டு பிடித்த ஜேர்மன் வானவியலாளர் வில்ஹெல்ம் ரோயென்ட்ஜென் என்பவரின் பெயர் இச் செய்மதிக்குச் சூட்டப்பட்டுள்ளது.

இச் செய்மதி கொண்டு செல்லும் தொலைநோக்கிகள் பிரபஞ்சத்தில் மனித கண்ணுக்குப் புலப்படாத எக்ஸ்ரே கதிர்கள் மற்றும் கருங்குழிகளில் இருந்து புறப்படும் ஊதாநிற ஒளி ஆகியவற்றைக்கண்டு பிடிக்கக் கூடியதாக அமைக்கப்பட்டு உள்ளது.

எகஸ்ரே-வானவியல் இந்த செய்மதி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஏற்கனவே ஹபிள் தொலைநோக்கி பிரபஞ்சத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது தெரிந்ததே! (எ)

### சூறாவளி மரணம் 375 ஆக உயர்வு

ஹைதரபாத், மே 14

ஆந்திர மாநிலத்தில் சூறாவளி காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்தது.

குண்டூர் மாவட்டத்தில் 143 பேரும் கிருஷ்ணா மாவட்டத்தில் 90 பேரும் உயிரிழந்தனர். (ஓ - எ)


முதலாவது

## பிறந்த நாள் வாழ்த்து

★ செல்வன் டிசாந்தின் ★

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சந்திரமோகன் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வன் டிசாந்தின் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை அப்பம்மா அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணன்மார் நல்லூர் கந்தனின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்:
(சி/4516)　　சந்திரமோகனும், பாரியாரும்.

SLAS
இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை - 1990

விரிவுரைகள் நுண்ணறிவை, பொது அறிவைத் தரா. சுயமான பயிற்சிகளே வெற்றியைத் தரும். அதற்கான பயிற்சி நூல்கள்:

1. பொதுளச்சார்பும் பொது அறிவும்
2. கிரகித்தல்
3. நுண்ணறிவு (20 - 05 - 90 இல் வெளிவரும், இதற்கென ஆக்கப்பட்ட விசேட நூல்)

ஆக்கியோன்: க. குணராசா, MA, SLAS

★ பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும் ★

- ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
- கமலம் பதிப்பகம், 82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[13053]


## 1ஆம் ஆண்டுநினைவு அஞ்சலி



அமரர்
### கிருஸ்ணபிள்ளை கோபாலரத்தினம்
B.A ( CEY ) S. L. A. S Class 1

மண்ணில் 18 - 11 - 1932　　விண்ணில் 15 - 05 -1989

ஊருலகம் மேதையென ஏத்தி வாழ்ந்த உத்தமனாய் ஆண்டிருந்த தலைவா, எங்கள் ஆறாத துயரத்தின் கண்ணீர் ஆறு ஆறிரண்டு திங்களிலே ஆறிப் போமோ? நினைந்துருகும் நெஞ்சுகளில் உங்கள் வதனம் நிலாப் போலே சுடர்கிறது! சாந்தி! சாந்தி!

தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.
மற்றும் உறவினர், நண்பர்கள்.

காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.
1990 - 05 - 15

( 13079 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு: கட்டுப்படுத்துவது பற்றி ஆராய குழு

## பிரதமர் விஜேதுங்க தலைமையில்

கொழும்பு, மே 15
வாழ்க்கைச்செலவைநியாய மான மட்டத்தில் ஸ்திர நிலைப்படுத்தும் சாத்தியக் கூறுகள்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கஎன பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க தலைமையில் அமைச்சர் மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வியாபார அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூரின் சிபாரிசின்மீதுஇக்குழுவை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்திருக்கிறார்.

அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, ஏ. ஆர். மன்சூர் வீரசிங்க மல்லிமாராச்சி, தர்மதாஸ பண்டா, ரூபா கருணாதிலக ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

அமைச்சுச்செயலாளர்களும் மத்தியவங்கி ஆளுநரும் இக்குழுக்கூட்டங்களில் கலந்து கொள்வர்.

இம்மாதம் 31-ஆம் திகதிக்கு முன்னர் இக்குழு தனதுஅறிக்கையைஜனாதிபதிக்குச்சமர்ப்பிக்கவேண்டுமென்றும் பணிக்கப்பட்டுள்ளது.

நான்கு பிரேரணைகள் பற்றி ஆராய்ந்து அவற்றை அமுல் செய்வதன் சாத்தியம் பற்றிக் குழு தனது சிபார்சுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

அப்பிரேரணைகள் வருமாறு;

★ உரவகைகள், சீனி, அரிசி, சிமெந்து என்பனவற்றைப் பெருமளவில் இறக்குமதிசெய்து கொழும்புத் துறைமுகத்தில் வைத்துப் பொதிசெய்தல்.

★ பொருள்களின் விலைகள் குறைவாக உள்ள சமயத்தில் முன்கூட்டியே பொருள்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்வது.

★ சீனி, பருப்பு, பெரிய வெங்காயம் என்பனவற்றின் மீது விதிக்கப்படும் மொத்த விற்பனவுவரி, மொத்தவியாபார விற்பனவுவரி, சுங்கத் தீர்வு ஆகியனவற்றை நீக்கி விடுவது.

★ அரிசி, கோதுமைமா, பெரியவெங்காயம் போன்றனவற்றின் இறக்குமதியில் அரசுக்கு இருக்கும் ஏகபோக உரிமையை நீக்குவதும் தனியார்மயப்படுத்துவதும் பற்றியது. (ஒ-எ)

---

மலையக மக்கள் விவகாரம் பற்றி

## இ. தொ. காவுடன் பேச ஐ. தொ. கா. விருப்பம்

கொழும்பு, மே 15
சுமார் ஒரு லட்சம் மலையக மக்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் பிரச்சினை தொடர்பாக இலங்கை தொழிலாளர்காங்கிரஸுடன் பேச்சுக்கள் நடத்த தயாராக இருப்பதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது.

இத்தகவலை ஐ. தொ. கா. பொதுச் செயலாளர் வி. பி. கணேசன் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சி என்ற முறையிலும் மலையகத் தமிழரில் அக்கறை கொண்ட ஸ்தாபனம் என்ற முறையிலும் ஐ. தொ. கா. வையும் இப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள அழைக்கும்படி திரு. கணேசன், அமைச்சர் விஜேரத்தினாவைக் கடித மூலம் கோரியிருக்கிறார்.

## மிருசுவில் இளைஞர் சோபியாவில் மரணம்

இத்தாலி நாட்டுக்குச் சென்ற மிருசுவில் இளைஞர் ஒருவர் இடைநடுவில் சோபியாவில் மரணமானார்.

மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கணேஷ் [வயது 32] எனும் இளைஞர் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இத்தாலிக்குச்செல்வதற்காக பல்கேரியாவில் உள்ள சோபியா நகருக்குச் சென்றார்.

அங்கிருந்து இத்தாலி செல்ல முயற்சித்த வேளை திடீர் என கடந்த வாரம் காலமானார்.

அவரது சடலம் சோபியாவில்தகனம்செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-76)

நிதி விடயங்களில்

## ஊழல் புரியும் அதிபர்கள் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, மே 15
பாடசாலை அபிவிருத்திச் சபை நிதி மற்றும் வசதிக் கட்டணங்களிலும் ஊழல் புரியும் பாடசாலை அதிபர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்படுவர்.

கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இப்படித் தீர்மானித்திருக்கிறார்.

—இப்படி தற்காலிக வேலை நீக்கத்திற்குள்ளாகும் அதிபர்கள் மீதான திணைக்கள விசாரணை, ஊழல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் பணத்தை திணைக்களத்தில் வைப்புச் செய்த பின்னரே நடத்தப்படும் என்றும் அமைச்சு தீர்மானித்துள்ளது. (உ-எ)

## வைத்தியசாலை வளர்ச்சியில் அக்கறை கொள்வது அவசியம்

### பளை உ. அ. அதிபர் உரை

பச்சிலைப்பள்ளிமே 15
ஆலயத்திற்கு அடுத்தபடியாக முன்னேற்றப்பட வேண்டியது வைத்தியசாலையே. வைத்தியசாலையை முன்னேற்றுவதால் அப்பகுதி மக்கள் தமது வைத்திய தேவைகளுக்காக வேறு இடம் செல்லத் தேவையில்லை இன்று உருவாக்கப்படும் அபிவிருத்திச் சபை, வைத்தியசாலை வளர்ச்சியில் அக்கறை கொள்ளவேண்டுமே தவிர நிர்வாகத்திற்கு இடையூறாக இருத்தல் கூடாது.

பளை அரச வைத்தியசாலை அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. கந்தசாமி தமது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அதிபர் திரு. பொன் தில்லைநாயகம், திரு. மு. இ. செல்லத்துரை, பச்சிலைப்பள்ளி அரசியல் பொறுப்பாளர் திரு. செல்வராசா, பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. ஏ. பீ. ஜோர்ஜ் உட்பட பலர் உரையாற்றினர்.

நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெற்றது. (இ-117)

## சிறந்த---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கம், செயற்திட்டம் என்பவற்றைப் பற்றி தெளிவாக விளக்கினார்.

சொத்தணி அதிபர். திரு. சி. நாகரெத்தினம், கிராமோதய சபைத் தலைவர் தங்கராஜா வேலுப்பிள்ளை, அதிபர் திரு. திருச்செல்வராஜா, திருமதி. லீலாவதி குணசிங்கம் ஆகியோரும் நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள். (இ-126)


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு: 21-02-1944
உதிர்வு: 12-05-1990

ஞானமுத்து மகனே!
ஞானத்தின் மருமகனே!
ராணிகண்ட கண்ணாளா – எம்
ரட்சகன் உன்னை அழைத்ததேனோ?
நட்பின் உறைவிடமாய்
நற்குணத்தின் சீலனாய்
அன்பிற் கிலக்கணமாய்
அன்பனே ஏன் இறந்தாய்?
அன்பர்கள் நாம் ஏங்குகின்றோம்!
ஆறாத்துயர் கொண்டோமையா!
உன் ஆத்மா சாந்தி கொள்ள
உனக்காக வேண்டுகின்றோம்!

சக ஊழியர்கள்,
மாந்தை மேற்கு ப. நோ. கூ. சங்கம்
திருக்கேதீச்சரம்.

(13094)


## அகிலன் ஞாபகார்த்தமாக கவிதைப் போட்டி நடக்கும்

யாழ்ப்பாணம், மே 15
யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் அகிலன் திருச்செல்வம் ஞாபகார்த்தமாககவிதைப்போட்டி ஒன்று நடத்தப்பட இருக்கிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் இந்தப்போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

போட்டி முடிவு எதிர்வரும் 28 ஆம் திகதியாகும். தெரிவு செய்யப்படும் கவிதைகளுக்கு முதலாம், இரண்டாம்' மூன்றாம் பரிசாக முறையே 500 ரூபா, 300ரூபா, 100ரூபா வழங்கப்படும்.

கவிதைகள் சமகால நிகழ்வுகளை பிரதிபலிப்பவையாக இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## பெல்பொல . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஜப்பானில் மகாயான புத்த பிரிவின் பிக்குவாகத் தீட்சை பெற்ற பின்னர் இம் மாதம் 21ஆம் திகதி நாடு திரும்புகிறார் எனவும் இலங்கையில் உள்ள பௌத்த பிரிவுக்கும் சாசனத்துக்கும்அபகீர்த்தியை உண்டுபண்ணிய அவர் புத்த சங்க சபையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனவும்சங்கைக்குரிய லபுகம லங்கானந்த தேரர் ஜனாதிபதிக்கு இம் மாதம் 11ஆம் திகதி எழுதிய கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில் அரசர்களும் அரசாங்கத் தலைவர்களும் மகாசங்கத்தின் முதுபெரும் உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்கியிருந்தார்கள். இலங்கையில் தூயதேரவாத பௌத்த மதப் பிரிவு தொடர்ந்து இயங்குவதற்கு இந்த ஆதரவு உதவியுள்ளது. 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பேணிப் பாதுகாக்கப்படும் தேரவாத பௌத்தத்துக்கு குந்தகம் ஏற்படும் வகையில் மகாயான பௌத்தத்தை அறிமுகம் செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தடை செய்யப்பட வேண்டும்.தேசத்தின் தலைவர் என்ற முறையில் பௌத்த சாசனத்தைக் காக்கும் பொறுப்பு ஜனாதிபதியைச் சார்ந்தது ஆகவே மகாயான பௌத்தத்தை இலங்கையில் பரப்ப எடுக்கப்படும் முயற்சிகளைத் தடுக்க அவர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

-இப்படி சங்கைக்குரிய லபுகம லங்கானந்த மகாநாயக்கர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார். [க]

## வசதிக்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் சேர்த்துக்கொள்ள வசதியாக நியமன வேலைகளை துரிதப்படுத்தும் பொருட்டு இந்த நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

நேர்முகப் பரீட்சையில் ஆசிரியரின் ஒரு வருட சேவைக் காலம் கட்டாயமாக கவனத்தில் எடுக்கப்படும்.

இதேவேளை நியமனங்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளில் வழங்கப்படமாட்டாது என அறிய வருகிறது. (ஒ-9)

## யாழ். வீரசிங்கம்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியோர்இந்தமண்டபத்தை பார்வையிட்டனர்,

இதனைத் தொடர்ந்து மண்டப புனரமைப்பு வேலைகளைஆரம்பிக்க [illegible] கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. [illegible]

## ★ இலங்கையிலா, மாலைதீவிலா?

## சார்க் மாநாடு இழுபறிக்கு விரைவில் முற்றுப்புள்ளி

புதுடில்லி, மே 15
அடுத்த சார்க் உச்சிமாநாடு எங்கு நடைபெறும்? இலங்கையிலா, மாலைதீவிலா?

இழுபறி நிலையில் இருக்கும் இந்த விடயத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட இருக்கிறது.

இழுபறிக்குத் தீர்வு காணும் முயற்சியாக வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு ஒன்று நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் அல்லது கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாத இறுதிப் பகுதியில் நடத்தப்படும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

எங்கே. எப்போது வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை நடத்துவது என்பது பற்றிய இறுதி முடிவு அடுத்த சில தினங்களில் எடுக்கப்படும் என்று தெரிகிறது. (ஒ-எ)

## ஓட்டமாவடி, ஏறாவூரில் புதிய உ. அ. அதிபர் பிரிவுகள்

### அமைச்சர் பெஸ்டஸ் உறுதி

கொழும்பு, மே 15
ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய இரு பகுதிகளிலும் புதிதாக இரண்டு உதவி அரச அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படும்.

பொதுநிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள்அமைச்சர்திரு. பெஸ்டஸ் பெரேரா இதற்கான உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

நேற்று அமைச்சரை அவரது அமைச்சில் மட்டக்களப்பு மாவட்ட எம்· பியும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஜனாப் எம். எல், ஏ. எம். ஹிஸ்புல்லா சந்தித்தார். அப்போது இந்த உறுதி மொழியை அமைச்சர் வெளியிட்டார்.

ஓட்டமாவடியில் சுமார் 35 ஆயிரம் முஸ்லிம்களும், ஏறாவூரில் சுமார் 39 ஆயிரம் முஸ்லிம்களும் வசிக்கின்றனர். (உ-2)

## ரூபா 300 கோடி- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாணவர்களின் கல்வி வசதிக்காகவும், வடபகுதி மக்களின் சுகாதார வசதிக்காகவும் சிறந்த, தரமிக்க போதனா ஆஸ்பத்திரி ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பதை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் வலியுறுத்தினார்.

அந்தக் கோரிக்கையை சுகாதார அமைச்சின் செயலாளர் ஏற்றுக்கொண்டார்.

''தற்போதுள்ள யாழ்.ஆஸ்பத்திரி 500 படுக்கை வசதிகளையே கொண்டது. இது யாழ்ப்பாணம் போன்ற பெரிய நகரத்துக்குப் போதுமானதல்ல'' என்று அவர் சொன்னார்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு உதவக் கூடிய வகையில் குறைந்தது ஆயிரத்து 500 படுக்கை வசதிகளைக் கொண்ட போதனா ஆஸ்பத்திரி வடக்கில் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சொன்னார்.

''இதற்கு சுமார் 300 கோடி ரூபா வரை செலவாகும். ஜப்பான் நாட்டு உதவியைப் பெற்று இதனை ஸ்தாபிக்க முயற்சி எடுக்கப்படும் — என்றார்.

[illegible]

வைத்திய அதிகாரிகள், மருத்துவ ஆலோசகர்கள் ஆகியோரின் இணக்கத்தோடு ஆஸ்பத்திரி நிர்வாகம், யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து இதற்கான கூட்டுக் கோரிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும்.

அப்போதுதான் இந்த முயற்சிக்கான அனுமதி வழங்க முடியும் – இவ்வாறு சுகாதார அமைச்சுச் செயலாளர் மேலும் சொன்னார்.

இந்த விடயம் குறித்து ஆஸ்பத்திரி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துவதற்காகவும்-

யாழ். ஆஸ்பத்திரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றை நேரடியாகப் பார்வையிடுவதற்காகவும் இம்மாத இறுதியில் தாம் யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

''யாழ் மக்களின் நலன் கருதி, புதிய போதனா ஆஸ்பத்திரியை அமைப்பதற்கான முயற்சிக்கு யாழ் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் முழு ஒத்துழைப்புத் தரும்'' என தாம் எதிர்பார்ப்பதாக துணைவேந்தர் துரைராஜா சொன்னார். (உ-2)

## புலிகளின்- - ·

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
காக்க முடியும். இது பற்றிப் பேசி உத்தரவாதம் பெறவே அங்கு செல்கிறோம்.

இந்த மக்கள் கடந்த காலத்தில் சகோதர உணர்வுடன் ஒன்றாக வாழ்ந்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது — இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

யாழ்ப்பாணம் செல்வதால் தமது உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்படாது என்றும் அவர் சொன்னார். (உ-2)

## "தூயஒளி" வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

குருநகர், மே 15
மண்டைதீவில் படுகொலையுண்ட 31, குருநகர் மீனவர்களின்ஞாபகார்த்த' தூயஒளி' வெற்றிக் கிண்ணத்துக்கான 3வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளை நடத்த குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

11 பேர் கொண்ட நொக் அவுட்' முறையிலான போட்டியில் வெற்றிபெறும் கழகத்திற்கு 1000 ரூபா ரொக்கப் பணமும், ''தூயஒளி', சுழற் கிண்ணம், வெற்றிக்கிண்ணம் என்பனவும் வழங்கப்படும்· இரண்டாவது தெரிவாகும் கழகத்திற்கு 500 ரூபா ரொக்கப்பணம், வெற்றிக் கிண்ணம் என்பன வழங்கப்படும்.

மேற்படி போட்டிகள் வடமாகாண ரீதியில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய உதைப்பந்தாட்ட லீக்குகளுடன் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும். யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பங்கு கொள்ளும் கழகங்கள் இம்மாதம் 20 - ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர் திரு. அ. பெனடிற் ராதா, ''பாடும்மீன்'' விளையாட்டுக்கழகம் ,16, ஜஸ்மின் வீதி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிக்விகப்படுகிறது. (க-51)

## பாம்பு தீண்டி இருவர் ஆஸ்பத்திரியில்

பச்சிலைப்பள்ளி, மே 15
நேற்று முன்தினம் பாம்பு தீண்டி இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தோட்டத்திற்கு தண்ணீர் இறைக்கச் சென்ற இயக்கச்சியைச் சேர்ந்த தா. விக்னேஸ்வரன் (வயது 28) என்பவரை புடையன் பாம்பு தீண்டியது. அவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துரவிலிருந்து மிளகாய் கன்றுக்கு தண்ணீர் இறைத்த மீசாலை வடக்கைச் சேர்ந்த த. மோகன் (வயது 21) என்பவரை நீர்ப்பாம்பு கடித்தது. அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## சுமார்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வாறு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இதனிடையில் நேற்று முன் தினமும் பொரளைப் பகுதியில் 30 தமிழ் இளைஞர்கள் கைதானதாகத் தெரிவிக்கப் பட்டது.

சாம் தம்பிமுத்து எம். பி. கொலை தொடர்பாகவும், தமிழ் குழுக்களுக்கு இடையே கொழும்பில் மோதல் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளதாக தமக்கு கிடைத்த புலனாய்வு அறிக்கைகளைத் தொடர்ந்துமே தேடுதல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-2)

## அரச அதிபர் சாவகச்சேரி விஜயம்

சாவகச்சேரி, மே. 15
யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை அரச அதிபரை வரவேற்றார்.

பணிமனை ஊழியர்கள், கிராமசேவையாளர்கள் மத்தியில் அரச அதிபர் உரையாற்றியதுடன் பிரதேச அபிவிருத்திகள் பற்றிய கலந்துரையாடலிலும் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சனசமூக கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

சாவகச்சேரி நகரசபை கொடிகாமம் நடமாடும் செயலகம், மிருசுவில் படித்த மகளிர்குடியேற்றத் திட்டம் மற்றும் கைதடிப் பகுதிகளுக்கும் உதவி அரசாங்க அதிபருடன் சென்று அப்பகுதியினரின் பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார். (இ- 31)

## மிதிவெடியில் முதியவர் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், மே 15
மாடுகளைத் தேடிச் சென்ற முதியவர் ஒருவர் மிதிவெடியில் மிதித்து காலை இழந்தார்.

நேற்றுக் காலை 7மணி அளவில் நாயாறுப் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றது.

காயமடைந்த செம்மலையைச் சேர்ந்த வி. கதிரவேலு (வயது 58) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-10)

## சப் இன்ஸ்பெக்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குக்கும் அப்பகுதி பொதுமக்களுக்கும் இடையில் கைகலப்பேற்பட்டதாகவும் அப்போது கூறப்பட்டது.

சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகள் அப்பகுதியைச் சுற்றிவளைத்தனர் வீரநகர் ''சென்றி'' திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகரினால் மூடப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் திணைக்கள விசாரணை முடிவுற்றிருப்பதாகவும்—

குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள ஆறு பேரும் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் தற்போது தெரிவிக்கப் படுகிறது. (உ)

## கொழும்பு - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வதாகக் கூறப்படுகிறது.

பொலிஸாரின் தேடுதல்கள் விசாரணைகள் மற்றும் கெடுபிடிகள் காரணமாக தமக்கு சிரமங்கள் ஏற்படுவதாலேயே அவர்களை வெளியேற்ற வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக ஹோட்டல், விடுதிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் தங்கியிருப்பதற்கு தகுந்த காரணம் காட்டும் இளைஞர்களுக்கு பொலிஸார பிரச்சினை ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப் பட்டது, [ஒ 2]


## அதிஷ்டலாபச்சீட்டு அதிஷ்டம் பார்த்ததில் தவறு

கடந்த மே 9 ஆம் திகதி அன்று நாயன்மார் கட்டில் அதிஷ்டம் பார்க்கப்பட்டபோது தவறுகள் இருந்ததன் காரணமாக அதிஷ்டம் பார்ப்பது 15 – 05 – 1990 (இன்று) நடைபெறும் என்று 11 ஆம் திகதி பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டது. தவறுகள் இன்னும் நீக்கப்படாததன் காரணமாக மீண்டும் மறு அறிவித்தல் வரை சீட்டிழுப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

EUROPE
CHINA HOTEL

(14087)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

15 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவு வாடகைக்கு பெற

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## சோதனைக் குழாய் மூலம் ஈன்ற 3 புலிக் குட்டிகள்!

ஒமஹா, மே 15

முதல் தடவையாக சோதனைக் குழாய் மூலம் உற்பத்தியான மூன்று பெண் புலிக்குட்டிகளை ஒரு சைபீரியன் பெண் புலி ஈன்றது.

இத்தகவலை ஒமஹா மிருகக் காட்சிச் சாலை நிர்வாகம் அறிவித்தது.

கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி சிஸேரியன் சத்திர சிகிச்சை மூலம் பிறந்த மூன்று குட்டிகளில் ஒன்று, பின்னர் மூச்சு விடும் கஷ்டத்தினால் உயிரிழந்தது. (ஒ-எ)

## தேயிலை ஏற்றுமதிக்கு பனைஓலைப் பெட்டிகள்

யாழ்ப்பாணம் மே 15

தேயிலைப் பைக்கெட்டுகளை பனை ஓலையால் செய்யப்பட்ட பெட்டி போன்ற கொள்கலன்களில் வைத்து ஏற்றுமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த கொள்கலன்களைப் பெறுவதற்கு கொழும்பு நிறுவனம் ஒன்று பனை அபிவிருத்திச் சபைக்கு ஓடர் வழங்கியுள்ளது.

இதே போன்று பிராண்டிப் போத்தலின் கழுத்துப் பகுதியைமூடும் மூடிகளையும் பனை ஓலையில் இருந்து தயாரிக்க கேள்விகள் பனை அபிவிருத்திச்சபையிடம் கோரப் பட்டுள்ளன. (இ - 3)

### யாழ். தேர்தல் மாவட்டம்:

## வாக்காளர் கணக்கெடுப்பு ஜூன் 1 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 15

யாழ் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் கணக்கெடுப்பு அடுத்த மாதம் முதலாம்திகதி ஆரம்பிக்கப்படும்.

1986ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே 1988ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய கணக்கெடுப்பு அடுத்த மாதம் முதலாம் திகதியில் ஆரம்பிக்கப்படும் என்றும், வீடுவீடாகத் தொண்டர்கள் சென்று இவ்வேலையில் ஈடுபடுவர் என்றும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் கிளிநொச்சித் தொகுதியும் அடங்குகிறது என்பது தெரிந்ததே. (ப-3)

எமது இன்றைய புதிய வெளியீடுகள்

முரளி — சுரேஷ் — ஆனந்பாபு — சித்தாராவின்

★ புது வசந்தம் ★
(ஒறிஜினல்)

நாகார்ஜுன் — சசிகலாவின்

இதோ இன்னொரு தேவதாஸ்
(ஒறிஜினல்)

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (13096)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

1. முரளி, சித்தாரா, சுரேஷ்
★ புது வசந்தம் ★
(ஒறிஜினல்)

2. நாகர்ஜுன் வழங்கும்
இதோ இன்னொரு தேவதாஸ்
(ஒறிஜினல்)

3. விஜயகாந், அமலா, சார்லி
★ புதுப் பாடகன் ★
(ஒறிஜினல்)

KVC கனம்
வீடியோ சென்ரர்.
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

[சி-5029]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நீண்டகாலத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு அபிவிருத்தி

### நொறாட் அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம் மே 15

நீண்ட காலத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தை நொறாட் அமைப்பு தெரிவு செய்துள்ளது.

நோர்வே அரசாங்கத்தின் உதவி வழங்கும் அமைப்பான நொறாட்டின் அதிகாரி குவிண்ட் போல்ஸ்ரட் மேற்கண்ட தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அரசியல், பொருளாதார நிலை குறித்து மதிப்பீடு செய்ய மட்டக்களப்புக்கு சென்ற அந்த அதிகாரி நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் அவர் விஜயம் செய்து நிலைமைகளை கேட்டறிந்தார்.

நொறாட் அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அவர் உதயனுக்கு தெரிவித்ததாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்கு இங்குள்ள அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும், அரசாங்கம் மூலமாகவும் உதவிகளை வழங்கி வருகிறோம்.

அதே நேரம் மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் நடைமுறைப்படுத்தப்படும் நீண்டகால அபிவிருத்தித் திட்டம் போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் நீண்ட கால அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

தமிழ் பிரதேசங்களுக்கு எம் அரசின் நிதியில் முன்னுரிமை அடிப்படையில் உதவி வழங்கி வருகிறோம்.

சுய வேலை வாய்ப்புத் திட்டம், மக்களின் அடிப்படை வசதி அளிக்கும் திட்டம், பெண்கள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவை எமது அபிவிருத்தித் திட்டங்களில் முதன்மை வகிக்கின்றன.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## ஆசிரியர் இடமாற்றம் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 15

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் ஆசிரியர் இடமாற்றம்பற்றி ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக் கல்வியமைச்சில்நேற்று கல்விப் பணிப்பாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அந்த மாநாட்டில் இடமாற்றசபையால் ஆராயப்பட்ட இடமாற்றங்கள் குறித்தும் மாணவர்களுக்கு மதிய உணவுக்காக முத்திரை வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## ஏற்பு ஊசி போடுவதற்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 15

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்பு ஊசி போடுவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இங்கு ஏற்புஊசி போட அனுமதிக்கப்படுவர் என்பதே புதிய கட்டுப்பாடாகும்.

அந்தந்தப் பகுதி ஆஸ்பத்திரிகளிலேயே ஏற்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ள வசதிகள் உள்ளன என்றும் யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## தேர்தல் ஊழியரது விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தொகுதிகளில் தேர்தல் பணிபுரியும் ஊழியர்களது விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

விரைவில் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் இவர்களைத் தேர்தற்பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னேற்பாடாகவே மேற்படி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

விவரம் அனுப்பும் இறுதி நாள் இன்று செவ்வாய்க்கிழமை ஆகும் என தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார். [ப-3]

## அதிபர், ஆசிரியருக்கு முகாமைத்துவ பயிற்சி

### தனியான கட்டட வசதி இல்லை

யாழ்ப்பாணம், மே. 15

யாழ். மாவட்டத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி அலுவலக அதிகாரிகள் ஆகியோருக்கு முகாமைத்துவப் பயிற்சி அளிக்க முகாமைத்துவபயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையத்துக்கென தனியான கட்டடம் அமைக்க 35 லட்சம் ரூபா வந்துள்ள போதும் கட்டட வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்நிலையத்துக்கென வந்துள்ள ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான அலுவலக உபகரணங்களும் கல்வி அலுவலகத்தில் பாவிக்காமல் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

எதிர்வரும் 22 ஆம் திகதி இந்த முகாமைத்துவ பயிற்சி முதல் தடவையாக வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்படும் என்றும் முகாமைத்துவ ஆலோசகர் திரு. எஸ். தணிகாசலம் தெரிவித்தார்.

இந்த நிலையம் மூலமாக கல்வி மதிப்பீடு, வள முகாமைத்துவம், கல்விமுறை ஆய்வுகள், முகாமைத்துவ தகவல் போன்ற போதனைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. (ஒ 3)

## கிளிநொச்சியில் இன்று தேனிசை

கிளிநொச்சி, மே 15

தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் திரு. சந்திரன், கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் திரு கோபி மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் பலர் உரையாற்றுவார்கள். [ஒ-76)

### "றோ" வின் நடவடிக்கை:

## கலைஞர் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும்-செழியன்

சென்னை, மே 15

மாநில - மத்திய அரசுகளுக்கு இடையே பிளவை ஏற்படுத்த இந்திய உளவு நிறுவனமான 'றோ' முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை முதலமைச்சர் கருணாநிதி நிரூபிக்க வேண்டும்.

தமிழ்நாடு ஜனதா தளம் தலைவர் இரா. செழியன் அறிக்கை ஒன்றில் இப்படிக் கோரியுள்ளார்.

முதலமைச்சரின் குற்றச்சாட்டு உண்மையானால் 'றோ' வின் நடவடிக்கைகள் முறையற்றதும் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானதாகவும் கருதப்படும் என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். [ஒ-எ]

## அறிஞர் சொக்கன் மணி விழா ஜூன் மாதம் 2ஆம் திகதி

யாழ்ப்பாணம், மே 15

தமிழறிஞர் சொக்கனின் மணிவிழா எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இத்தகவலை சொக்கன் மணிவிழாச் சபைத் தலைவர் திரு. தி. கமலநாதன் தெரிவித்தார்.

நாற்பதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஈழத் தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் தொடக்கம் பல தரப்பட்ட தமிழ் இலக்கிய ஆக்கங்களில்ஈடுபட்டுவரும் சொக்கன் தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

சுமார் அரைநூற்றாண்டுக் காலம் இலக்கியப் பணி புரிந்து வரும் சொக்கன் பழந்தமிழ் இலக்கியங்களுடனும் நவீன இலக்கியங்களுடனும் மேலைத் தேச இலக்கியங்களுடனும் நன்கு பரிச்சயமானவர்.

எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், பாடசாலை அதிபர் என்றெல்லாம் பல்வேறு துறைகளிலும் பணியாற்றியுள்ள சொக்கனின் மணிவிழாவை ஒட்டி மலர் ஒன்றை வெளியிடவும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### 1991 ஆம் ஆண்டு

## முதலாம் வருட வகுப்புக்கு இப்போது விண்ணப்பிக்கலாம்

### கடைசித் தினம் 31 ஆம் திகதியாகும்

அரசு பாடசாலைகளில் 1991 ஆம் ஆண்டு முதலாம் வருட வகுப்புக்களில் மாணவரைச் சேர்க்க விரும்புவோர் விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம்மாதம் 31ஆம் திகதி என்று அறிவிக்கப்படுகிறது.

1986 ஜனவரி முதலாம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பிறந்த பிள்ளைகளே முதலாம் ஆண்டு வகுப்பில் அனும[illegible] [illegible] கள் [illegible] பெற்றோர்கள் நிரந்தர மாக வசிக்கும் இடத்திற்குஅருகில் உள்ள பாடசாலை அதிபருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

### பண்ணிசைப் போட்டி

இணுவில் பரராசசேகர பிள்ளையார் கோவில் திருவிழா இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாவதை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினர் பண்ணிசைப்போட்டி ஒன்றை நடத்துவர். [ப-90]

## நஷ்ட ஈடு வழங்குவதற்கு முன் விவரங்கள் கோரப்படுகின்றன

### சுற்று நிருபத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம் மே 15

வன்செயல்களினால் உயிர் இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு முன்னோடியாக அவர்கள் சம்பந்தமான சில விவரங்களை புனர்வாழ்வு அமைச்சு கோரியுள்ளது.

87 ஆம் ஆண்டு இடம் பெற்ற வன்செயல்களின் போது இறந்த, அல்லது உடமைகள் இழந்த அரச ஊழியர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவது சம்பந்தமாக வெளியிடப்பட்ட 49/89 ஆம் இலக்க சுற்றறிக்கையில் சில மாற்றங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

வன்செயல் பாதிப்பு சம்பந்தமாக அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இரு வருட கடன் தொகையில் மீதமான தொகையின் விவரமும் -

சேதமடைந்த வீடு நஷ்ட ஈடு கோருபவருக்குச் சொந்தமானதா? அல்லது சொந்த மற்றதா? என்ற விவரமும் -

கொள்ளையிடப்பட்ட பொருள்கள் பற்றிய உறுதி வழங்கும் அதிகாரியின் பணிப்புரையும் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று புதிய சுற்றறிக்கை கூறுகிறது. (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திரு. L. S. இராஜநாயகம்

[உரிமையாளர் சென். பிலோமினா அச்சகம் யாழ்]

திரு. L. S. இராஜநாயகம் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். அவர் காலம்சென்ற அப்பலோனியாவின் அன்புக் கணவரும் காலம்சென்ற லூர்து நாயகி, அந்தோனிப்பிள்ளை, வணபிதா R. J. ஜெயசீலன், அருள், அலோய், யூலி, அஞ்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற C. P. அன்ரனி, ஹில்டா, பான்ஸி, மாலினி, ஜீவம், விக்ரர் இம்மனுவல் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 15 - 05 - 90 செவ்வாய்க்கிழமை மாலை 4 00 மணியளவில் யாழ் புனித மரியாள் பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

தகவல்:
அருள் இராஜநாயகம்.

102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (13092)

### செல்வி நடராசா றஞ்சினிதேவி

உடுவில் கிழக்கு நடராசா றஞ்சினிதேவி காலமாகி விட்டார்.

இவர் உடுவில் கிழக்கு காலஞ்சென்ற சண்முகம் நடராசா, கனகம்மா ஆகியோரின் அன்பு மகளும், சண்முகம் பொன்னுத்துரையின் பெறாமகளும், சிறீகாந்தன், சறோஜினிதேவி, சந்திரகாந்தன் (சுவிஸ்), சகுந்தலாதேவி, செல்வகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயபாலரட்ணம் (ஆசிரியர், மல்லாகம் ம. மகா வி.), ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஜெயபிரசாத், ஜெயதினேஷ் ஆகியோரின் சிறிய தாயாரும், சிவதர்ஷனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-05-1990) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு உடுவில் கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
ந. சிறீகாந்தன் [3570]

### திருமதி பாக்கியநாதர் லூர்த்தம்மா

செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த திருமதி பாக்கியநாதர் லூர்த்தம்மா காலமானார்.

இவர் காலம்சென்ற பாக்கியநாதரின் மனைவியும், ஸ்ரீபன் வெண்டக்கோன் (கிராம சேவையாளர், செம்பியன்பற்று), மலரம்மா, ராணி, ஜோன்மேரி, விஜியன் (இத்தாலி), மதுரநாயகம் (உப தபால் அதிபர், செம்பியன்பற்று), பீற்றர் குணநாயகம் ஆகியோரின் அன்புத் தாயாரும், K. S. இராசையா (சமாதான நீதவான்), இரத்தினம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரியும், பாக்கியராஜா, ராசமணி, றோசலின், பூமணி, அன்னமேரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள்

[3571]

### திரு. கணபதிப்பிள்ளை பரசுராமர்

[இளைப்பாறிய புகையிரத கண்காணிப்பாளர்]

மானிப்பாயைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை பரசுராமர் (இளைப்பாறிய புகையிரத கண்காணிப்பாளர்) 14-05-1990 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சொர்ணத்தின் அன்புக் கணவரும், ராஜபுவனேந்திரன் (அண்ணா கோப்பி), கிருபைராஜா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-05-1990 புதன் கிழமை காலை 11 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. இரத்தினசிங்கம் [கிளி]

[13095]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org